டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 1.04.2026 புதன்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 234 - Madurai | Online Edition

# மேற்கு தொடர்ச்சி மலையை ஒட்டிய மாவட்டங்களில் லேசான மழைக்கு வாய்ப்பு!

சென்னை, மார்ச் 31

கிழக்கு உத்தரப்பிரதேசம் முதல் தென்தமிழகம் வரை விதர்பா, மரத்வாடா மற்றும் உள் கர்நாடகா வழியாக ஒரு காற்றழுத்த தாழ்வு பாதை நிலவுகிறது.

இதன் காரணமாக இன்று 01.04.26 மற்றும் 02.04.26 ஆகிய நாட்களில் தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசான மழை பெய்யக் கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

03.04.26ல் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் அதனை ஒட்டிய மாவட்டங்களில் ஒரு சில இடங்களில், இடி மின்னலுடன் கூடிய கூடிய லேசானது முதல் மிதமான மழையும், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழையும் பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலையை பொறுத்தமட்டில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# வெயில் தாக்கத்தால் உதிர்ந்து விழும் மாம்பிஞ்சுகள்



கிருஷ்ணகிரி, மார்ச் 31

கோடை வெயிலின் தாக்கத்தால், போச்சம்பள்ளி பகுதியில் மாமரங்களில் இருந்து மாம்பிஞ்சுகள் வெதும்பி உதிர்ந்து விழுவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், 36 ஆயிரம் ஹெக்டர் பரப்பளவில் விவசாயிகள் மா சாகுபடி செய்துள்ளனர். நடப்பாண்டு கோடைக்கு முன்பே கடும் வெயில் வாட்டி வருகிறது. இதனால் ஏரி, குளம், குட்டைகளில் தண்ணீரின்றி வறண்டு காணப் படுகிறது. இந்நிலையில் மாந்தோட்டங்களில் உள்ள மா மரங்களில் தற்போது காய்பிடிப்பு தொடங்கியுள்ளது. கடும் வெயில் காரணமாக, மாமரங்களில் இருந்து மாம்பிஞ்சுகள் உதிர்ந்து கீழே விழுகிறது. இதனால் மா விளைச்சல் குறையும் என விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

இதுகுறித்து தமிழக அனைத்து பாசன விவசாயிகள் சங்க தலைவர் சிவகுரு கூறுகையில், ஆண்டுதோறும் மா விளைச்சல் அதிகரிப்பால் விலை குறைவு அல்லது மழையால் விளைச்சல் சரிவு போன்ற காரணங்களால், மா விவசாயிகள் நஷ்டம் அடைந்து வருகின்றனர். நடப்பாண்டு பூக்கள் நன்றாக பூத்து, மாம்பிஞ்சுகள் வளர்ந்து வருகிறது. இந்நிலையில், கடும் வெயிலால் மாந்தோட்டங்கள் காய்ந்து வரும் நிலையில், ஒரு டிராக்டர் தண்ணீரை ரூ.500 முதல் ரூ.700 வரை விலை கொடுத்து வாங்கி ஊற்றி, மாமரங்களை காப்பாற்றி வருகின்றனர். தற்போது, வெயிலின் தாக்கம் காரணமாக, மாம்பிஞ்சுகள் உதிர்ந்து வருகிறது. இதனால் விளைச்சல் பாதிக்கப்படும் என்பதால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும்,' என்றார்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# 4வது முறையாக வீராணம் ஏரி முழு கொள்ளளவை எட்டியது

கடலூர், மார்ச் 31

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் அருகே லால்பேட்டையில் உள்ள வீராணம் ஏரியின் மூலம் 34 பாசன மதகுகள் வழியாக 44 ஆயிரத்து 856 ஏக்கர் விளைநிலங்கள் நேரடி பாசனம் பெறுகிறது. இதற்கிடையே நடப்பாண்டில் 4 வது முறையாக வீராணம் ஏரி அதன் முழு கொள்ளளவை எட்டியது. இதனால் ஏரி கடல்போல் காட்சியளிக்கிறது.

இது குறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், சென்னையில் உள்ள சுமார் 50 லட்சம் மக்களின் குடிநீர் தேவையை நிறைவு செய்யும் வகையில் வீராணம் ஏரியில் இருந்து தினமும் சுமார் 73 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அதனை கோடைகாலத்தில் பூர்த்தி செய்யும் வகையில் மேட்டூரில் இருந்து பெறப்பட்டு குடிநீரை அனுப்பி வருகிறோம். இந்த கோடை காலம் முழுவதும் சென்னைக்கு குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் மேட்டூரில் இருந்தும் சிறப்பு உத்தரவு பெற்று வீராணம் ஏரிக்கு தண்ணீர் பெற்று தற்போது நிரப்பி உள்ளோம். இந்த தண்ணீர் முழுவதும் சென்னை குடிநீருக்காக மட்டும் பயன்படுத்தப்படும். மேலும் ஏரியின் பாதுகாப்பு கருதி அதிகாரிகள் ஏரியின் மதகு, கரைகளை ஆய்வு செய்து வருகின்றனர், என்றனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்–ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

*நேற்றைய தொடர்ச்சி...*

## 2. அடுப்பில்லா சமையலின் சிறப்புகள்

**சத்துக்கள் பாதுகாப்பு :** காய்கறிகள், கீரைகள் மற்றும் பழங்களை வேகவைக்கும் போது, குறிப்பாக நீரில் கரையக் கூடிய வைட்டமின்கள் (வைட்டமின் C மற்றும் B குரூப்) அழிந்து விடுகின்றன. அடுப்பில்லா சமையலில் இவை முழுமையாகக் கிடைக்கின்றன.

**எளிதில் செரிமானம் :** இயற்கை உணவுகளில் உள்ள நார்ச்சத்து (Fiber) மற்றும் நொதிகள் செரிமான மண்டலத்தை சீராக்குகின்றன.

**நச்சுத்தன்மை நீக்கம் :** செயற்கை நிறமூட்டிகள், அதிக உப்பு மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுகளைத் தவிர்ப்பதால் உடல் தானாகவே நச்சுக்களை வெளியேற்றுகிறது.

**உடல் எடை மேலாண்மை :** குறைந்த கலோரிகள் மற்றும் அதிக நார்ச்சத்து இருப்பதால், இது உடல் எடையை சீராக வைக்க உதவுகிறது.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***



# தொழில்நுட்ப பயிற்சி இல்லாமை : விவசாய வளர்ச்சிக்கு தடையாகும்

முன்னுரை

இந்தியாவின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குவது விவசாயத் துறை ஆகும். குறிப்பாக தமிழ்நாடு போன்ற மாநிலங்களில், மக்கள் வாழ்க்கை முறையுடன் விவசாயம் நெருக்கமாக இணைந்துள்ளது. ஆனால் இன்றைய காலத்தில் தொழில்நுட்ப வளர்ச்சி வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் போது, அதனைப் பயன்படுத்தும் திறன் விவசாயிகளிடம் போதுமான அளவில் இல்லாதது மிகப்பெரிய சவாலாக உருவாகி உள்ளது. தொழில்நுட்ப பயிற்சி இல்லாமை, விவசாய வளர்ச்சிக்கு ஒரு முக்கிய தடையாக மாறியுள்ளது.

**தொழில்நுட்பத்தின் அவசியம்**

நவீன விவசாயம் என்பது பழைய முறைகளில் மட்டுமே நம்பிக்கையுடன் செயல்படுவது அல்ல. இன்று தானியங்கி இயந்திரங்கள், துளி பாசனம், செயற்கை நுண்ணறிவு, மண் பரிசோதனை தொழில்நுட்பங்கள், டிஜிட்டல் சந்தை அமைப்புகள் போன்ற பல புதிய தொழில்நுட்பங்கள் விவசாயத்தில் பயன்பாட்டில் உள்ளன. இவை அனைத்தும் விளைச்சலை அதிகரிக்கவும், செலவினத்தை குறைக்கவும் உதவுகின்றன. ஆனால் இத்தகைய தொழில்நுட்பங்களை சரியாக பயன்படுத்த பயிற்சி அவசியமாகிறது.

**தொழில்நுட்ப பயிற்சி இல்லாமையின் காரணங்கள்**

**1. கல்வி மற்றும் விழிப்புணர்வு குறைவு**

பல விவசாயிகள் இன்னும் பாரம்பரிய முறைகளையே பின்பற்றி வருகின்றனர். புதிய தொழில்நுட்பங்களைப் பற்றி போதிய விழிப்புணர்வு இல்லாதது முக்கிய காரணமாகும்.

**2. கிராமப்புற பயிற்சி மையங்களின் பற்றாக்குறை**

விவசாயிகளுக்கான பயிற்சி மையங்கள் பல இடங்களில் இல்லை அல்லது செயல்படவில்லை. இதனால் நேரடி பயிற்சி பெறும் வாய்ப்பு குறைகிறது.

### 3. பொருளாதார சிக்கல்கள்

புதிய தொழில்நுட்பங்களை கற்றுக்கொள்வதற்கும் பயன் படுத்துவதற்கும் செலவுகள் அதிகம். சிறு மற்றும் குறைந்த நிலப்பரப்பு கொண்ட விவசாயிகள் இதை ஏற்க முடியாத நிலை உள்ளது.

### 4. டிஜிட்டல் அறிவு குறைவு

ஸ்மார்ட்போன், இணையம் போன்றவற்றின் பயன்பாட்டில் பல விவசாயிகள் திறமையற்ற நிலையில் உள்ளனர். இதனால் ஆன்லைன் பயிற்சிகளைப் பயன்படுத்த முடியவில்லை.

### 5. அரசு திட்டங்கள் பற்றிய தகவல் பற்றாக்குறை

அரசு பல திட்டங்களை அறிவித்தாலும், அவை விவசாயி களிடம் சரியாக சென்றடைவதில்லை.

## விவசாய வளர்ச்சியில் ஏற்படும் பாதிப்புகள்

### 1. குறைந்த விளைச்சல்

புதிய விதைகள், உரங்கள், இயந்திரங்கள் போன்றவற்றை சரியாக பயன்படுத்த முடியாததால் விளைச்சல் குறைகிறது.

### 2. அதிக உழைப்பு மற்றும் செலவு

தொழில்நுட்ப உதவிகள் இல்லாமல் கைமுறையில் வேலை செய்வதால் நேரமும் உழைப்பும் அதிகமாகிறது.

### 3. சந்தை அணுகல் சிக்கல்கள்

டிஜிட்டல் சந்தைகள் பற்றிய அறிவு இல்லாததால், விவசாயிகள் நேரடியாக சந்தையை அடைய முடியாமல் நடுவிலாளர்களை சார்ந்து இருக்க வேண்டியுள்ளது.

### 4. வளங்கள் வீணாகுதல்

நீர், உரம் போன்ற வளங்களை சரியான முறையில் பயன்படுத்த முடியாததால் வீணாகின்றன.

### 5. இளைஞர்கள் விவசாயத்தை விட்டு விலகுதல்

நவீன தொழில்நுட்ப அறிவு இல்லாததால் விவசாயம் லாபகர மற்றதாக தோன்றுகிறது. இதனால் இளைஞர்கள் வேறு துறை களுக்கு செல்கின்றனர்.

**தீர்வுகள் மற்றும் முன்னெடுப்புகள்**

**1. பயிற்சி மையங்கள் அமைத்தல்**

ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது ஒன்றிய அளவிலும் விவசாய தொழில்நுட்ப பயிற்சி மையங்கள் அமைக்கப்பட வேண்டும்.

**2. டிஜிட்டல் கல்வி மேம்பாடு**

விவசாயிகளுக்கு ஸ்மார்ட்போன் பயன்பாடு, இணையம், அப்பிளிக்கேன்கள் போன்றவற்றில் பயிற்சி அளிக்க வேண்டும்.

**3. அரசு மற்றும் தனியார் ஒத்துழைப்பு**

அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து தொழில்நுட்ப பயிற்சி திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

**4. வயல் நில பயிற்சி**

விவசாயிகள் நேரடியாக வயலில் செயல்முறை பயிற்சி பெறும் வகையில் திட்டங்கள் அமைய வேண்டும்.

**5. ஊக்கத் தொகைகள்**

புதிய தொழில்நுட்பங்களை கற்றுக்கொள்ளும் விவசாயிகளுக்கு அரசு ஊக்கத் தொகைகள் வழங்க வேண்டும்.

**6. இளைஞர்களை ஈர்த்தல்**

விவசாயத்தில் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் இளைஞர்களை ஈர்க்க முடியும்.

**எதிர்கால நோக்கு :** தொழில்நுட்பம் மற்றும் விவசாயம் ஒன்றிணைந்தால் மட்டுமே நிலையான வளர்ச்சி சாத்தியம். “ஸ்மார்ட் விவசாயம்” என்ற புதிய கருத்து இந்தியாவில் வேகமாக வளர்ந்து வருகிறது. இதனை முழுமையாக செயல்படுத்த தொழில்நுட்ப பயிற்சி மிக முக்கியமானதாகும்.

**முடிவுரை :** தொழில்நுட்ப பயிற்சி இல்லாமை என்பது ஒரு தனிப்பட்ட விவசாயியின் பிரச்சினை மட்டுமல்ல; அது முழு நாட்டின் உணவுப் பாதுகாப்புக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் ஒரு முக்கிய பிரச்சினையாகும். இதை சரிசெய்ய அரசு, கல்வி நிறுவனங்கள், மற்றும் சமூக அமைப்புகள் இணைந்து செயல்பட வேண்டும். விவசாயிகளுக்கு சரியான தொழில்நுட்ப அறிவு வழங்கப்பட்டால், அவர்கள் தங்கள் உழைப்பை மேம்படுத்தி, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றுவார்கள்.

“தொழில்நுட்பம் கற்ற விவசாயி — வளமான இந்தியாவின் அடித்தளம்”

கட்டுரை ஆசிரியர் : ***Er.S.சுகுமார் M.E., உதவி பேராசிரியர், வேளாண்மைப் பொறியியல் துறை, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி. மின்னஞ்சல் : sukumarsubramani2002@gmail.com.***

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நவீன வேளாண்மையில்

# தென்னையில் ஊடுபயிர் ஜாதிக்காய்

**தென்னை மரங்களுடன் ஜாதிக்காய் சாகுபடி**

தென்னை 36 X 36 அடி இடைவெளி மிகவும் உகந்தது. ஆனால் பெரும்பாலும் விவசாயிகள் தென்னை மரங்களை 24-28 அடி இடைவெளியில் நடுகிறார்கள். நான்கு தென்னை மரங்களுடன் நடுவில் ஒரு ஜாதிக்காய் மரங்களை நடவு செய்ய வேண்டும். அதாவது 1:1 என்ற விகிதத்தில் நடுகிறோம். இதில் 70 தென்னையும் 70 ஜாதிக்காயும் இருக்கும். தென்னை மரங்கள் குறைந்த பட்சம் 5 ஆண்டுகள் வளர்ந்ததாக இருந்தால் ஜாதிக் காய் வளர்வதற்கு போதுமான குளிர்ச்சி இருக்கும். மேலும் தென்னைக்கும் ஜாதிக்காய் நாற்றுக்கும் நடவில் கிளைரி சிடியா மரம் இருப்பது உகந்தது.



**உத்தேச மகசூல்**

பெண் ஜாதிக்காய் மரம் 6ம் ஆண்டிலிருந்து காய்க்கத் தொடங்குகிறது. ஆனால், அதிகபட்ச அறுவடை காலம் 10-15 ஆண்டுகளுக்குப் பிறகு கிடைக்கும். காய்கள் பூத்த 6-9 மாதங் களில் அறுவடைக்கு தயாராகிவிடும். ஜுன்-ஆகஸ்ட் மாதங் களில் பழங்கள் அறுவடைக்கு வருகிறது.

பழங்கள் முற்றி வெடித்து, அறுவடைக்குத் தயாராகும். பில் கொக்கி (Bill Hook) மூலம் அறுவடை செய்யப்படுகிறது. வெளிப் புற சதைப்பகுதி அகற்றப்பட்டு, விதையும் பத்தியும் கைகளால் பிரிக்கப்படுகிறது. பத்திரி 10-15 நாட்களுக்கும், விதைகள் 4-8 வாரங்களும் உலர வைக்க வேண்டும். சில மரங்களில் இருந்து கிடைக்கும் ஜாதிக்காய் விதை ஒரு கிலோவுக்கு 120 வரை இருக்கும். 15 வருடங்கள் மற்றும் அதற்கு மேல் உள்ள மரம் 1000-2000 பழங்களைக் கொடுக்கும், 30 வயதுக்கு மேற்பட்ட பெரிய மரங்கள் ஆண்டுக்கு சுமார் 3000-10000 பழங்களைத் தரும்.

## தரப்படுத்தல்



உலர்ந்த ஜாதிக்காய்கள் எடை, வடிவம் மற்றும் நிறம் ஆகிய வற்றின் அடிப்படையில் கைகளால் தரப்படுத்தப்படுகின்றன. நான்கு தரங்களாக பிரிக்கப் படுகிறது. தரத்தை பொருந்து விலை மாறும். எனவே ஜாதிக்காய்களை தரம் பிரித்த பிறகு, இயற்கையான புகை பிடிக்கப்படுகிறது. முழு ஜாதிக்காய்களை தரம் பிரித்த பிறகு, இயற்கையான புகை பிடிக்கப்படுகிறது. முழு ஜாதிக்காயில் இருந்து ஜாதிப்பத்திரியை பிரிக்கும் போது காயை உள்ளங் கையில் வைத்து உள்ளே இருக்கும் பத்திரியையும் சிறிது திருகி எடுத்து பிரிக்க வேண்டும். பிரிக்கும் போது பத்திரி உடையக் கூடாது. பத்திரி உடைந்தால் அதன் விலை பாதியாகக் குறையும். எனவே, சரியான விலை கவனமும் தரப்படுத்துதலும் அவசியம்.

1) முழுமையான சுருங்காத ஜாதிக்காய்கள் 1.பெரிய 2. நடுத்தர மற்றும் 3.சிறியதாக தரப்படுத்தப்படுகிறது.

2) சுருங்குகியவை தனியாக தரப்படுத்தப்படுகிறது. எனினும் எண்ணெய்க்கான இது பயன்படுத்துவதில்லை.

3) நிராகரித்த ஜாதிக்காய்கள் சற்று விலை குறைந்தவை. பொதுவாக எண்ணெய் காய்ச்சுவதற்குக பயன்படுத்தப்படுகிறது.

4) உடைந்த புழு தாக்கிய காய்கள் பொதுவாக எண்ணெய் காய்ச்சுவதற்கு பயன்படுத்தப்படுகிறது.

## எண்ணெய்

எண்ணெய் அளவு ஜாதிக்காயில் 6-16 சதவீதம் வரையிலும், பத்திரியில் 4-15 சதவீதம் வரையிலும் உள்ளது. பட்டை மற்றும் இலைகளில் கூட எண்ணெய் உள்ளது. மேலும் டிரிமிரிஸ்டிசின் ஓலியோரெசின் உள்ளன. மேலும் கொழுப்பு சத்தும் உள்ளது.

## கலப்படங்கள்

ஜாதிக்காய்களை போன்ற மணமற்ற மற்றும் சுவையற்ற போலி ஜாதிக்காய்கள் கலப்படம் செய்யப்படுகின்றன. உதாரணமாக காட்டு ஜாதிக்காய் கலப்படம் செய்யப்படுகிறது. தண்டாயுதம் சில சமயங்களில் தரம் குறைந்த உடன் கலப்படம் செய்யப் படுகிறது.

**வருமானம்**

ஒரு ஏக்கரில் 25 அடி இடைவெளியில் 75 மரம் இருந்தால் சிறப்பான அறுவடை செய்ய முடியும். ஒரு காய்க்கு 5 ரூபாய் விலை கிடைக்கும். 1,000 காய் என்றால் ஒரு மரத்தில் 5500 ரூபாய் கிடைக்கும்.

தொடர்புக்கு : ***ரஞ்சித் குமார், அலைபேசி எண்: 90807 46461 மற்றும் வு.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, வேளாண்மைப் பொறியாளர், உடுமலை.***




# பல மடங்கு வருமானம் தரும் ‘பனங்கிழங்கு‘



பனங்கிழங்கை ஜனவரி / பிப்ரவரி மாதங்களில் சாலையோரங்களில் கட்டு கட்டாக விற்பனை செய்வதை நாம் கண்கூடாக பார்த்து இருக்கிறோம்.

இதை சிலர் வாங்கி சாப்பிடாம இதிலென்ன இருக்க போகிறது என்று அலட்சியமாக எண்ணியிருப்பார்கள். அது தவறு. இதிலிருக்கும் நன்மைகளை கேட்டால் ஆச்சரியபட போகிறார்கள். அது என்ன என்பதையும் எவ்வாறு மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாக மாற்ற வேண்டும் என்பதையும் விரிவாக பார்ப்போம்.

**பனங்கிழங்கு எப்படி வருகிறது தெரியுமா?**

பலர் பனங்கிழங்கை பனைமரத்திலிருந்து கிடைக்கிறது என்று எண்ணக் கூடும் அது தவறு. பனங்கிழங்கு என்பது நேரடியாக பனை மரத்திலிருந்து கிடைப்பது கிடையாது. அது பனம் பழத்தை மண்ணில் புதைத்து நீர் விட்டு வர ஓரிரு மாதங்களில் முளை விட்டு வரத் தொடங்கும். இப்போது அதை தோண்டி பார்த்தால் நீளமான குச்சி போன்று வளர்ந்திருக்கும். அது தான் பனங்கிழங்கு (PALMYRA SPROUT).

**என்னென்ன சத்துகள் உள்ளன? தெரியுமா?**

பனங்கிழங்கு ஒரு இயற்கையான நார்சத்துள்ள உணவு. எவ்வித இரசாயன உர கலப்பின்றி விளையக்கூடிய முளைகுருத்து. இதில் அனைத்து கனிம சத்துகளும் உடல் வலிமையை மேம்படுத்துவதோடு, நீரிழிவு நோயாளிகளுக்கு ஏற்றதாக உள்ளது.

அதுமட்டுமல்ல குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற பாதுகாப்பான பாரம்பரிய உணவாக உள்ளது. பனை வெறும் மரம் மட்டுமல்ல. அது ஒரு கற்பக விருட்சமாக அத்தனை பாகங்களும் பயன்படக்கூடியது.

**பனங்கிழங்கை மதிப்புக்கூட்டப்பட்ட பொருளால் பல மடங்கு லாபம் பெறுவது எப்படி?**

பனங்கிழங்கை நேரடியாக விற்பனை செய்தால் லாபம் குறைவு. அதை நன்றாக சுத்தம் செய்து, வேக வைத்து, உலர்த்தி தூளாக்கி பாக்கெட்டில் அடைத்து விற்பனை செய்து, அதுவும் சமூக வலைதளங்கள் வாயிலாக விளம்பர செய்து ஆன்லைன் மூலமாக சந்தைபடுத்துவதால், பல மடங்கு வருமானத்தை ஈட்ட முடியும்.

**பனங்கிழங்கில் என்னென்ன மதிப்புக்கூட்டப்பட்ட பொருள் தயாரிக்கலாம்?**


பனங்கிழங்கிலிருந்து பலவிதமான உணவுகளை (SNACKS) தயாரிக்கலாம்.

பனங்கிழங்கு லட்டு, அல்வா, பிஸ்கட், முறுக்கு, அடை, கஞ்சி போன்ற உணவுகளை (ஆரோக்கிய ஸ்நாக்) என்ற பெயரில் விற்பனை செய்யப்படுகிறது. இதற்கு மக்களிடத்திலும் வெளிநாட்டிலும் நல்ல வரவேற்பு இருப்பதால் பனங்கிழங்கிற்கு சந்தை வாய்ப்பு அதிகமாக உள்ளது.

இதை சிறு தொழிலாக பதிவு செய்து கிராமப்புறத்தில் தொழில் முனைவோராக வலம் வரலாம். இதற்கு காதி போர்டு, எம்.எஸ் எம்.இ மூலமாக மானிய உதவி கிடைக்கும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**




கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# நாவற்பழ செயலாக்கத்தில் உறைபதன புதுமைகள்

## அறிமுகம்

நாவற்பழம் (Syzygium cumini) இந்தியாவின் பாரம்பரிய மற்றும் ஊட்டச்சத்து நிறைந்த பழங்களில் ஒன்றாகும். இதன் ஆழமான ஊதா நிறம், இனிப்பு – துவர்ப்பு கலந்த சுவை மற்றும் பல்வேறு மருத்துவ குணங்கள் காரணமாக இது தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

ஆன்டி–ஆக்சிடென்ட் கூறுகள், இரும்புச் சத்து, வைட்டமின் C மற்றும் பல உயிர்ச்செயலூக்கச் சேர்மங்கள் இதில் அதிகமாக உள்ளன. இருந்தாலும், குறுகிய அறுவடை காலம் மற்றும் விரைவில் கெடுதல் தன்மை காரணமாக நாவற்பழத்தின் முழுமையான வணிக பயன்பாடு இன்னும் சாத்தியமாக வில்லை. இந்த சவால்களுக்கு தீர்வாக நவீன உறைபதன முறைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. குறிப்பாக தனித்தனி விரைவு உறைபதனம் மற்றும் உறை உலர்த்தல் போன்ற முறைகள், நாவற்பழத்தை ஆண்டு முழுவதும் பாதுகாக்கவும், மதிப்பு கூட்டப்பட்ட தயாரிப்புகளாக மாற்றவும் உதவுகின்றன.

## தனித்தனி விரைவு உறைபதன தொழில்நுட்பம்


உணவுப் பொருட்களின் இயல்பான நிறம், சுவை, அமைப்பு மற்றும் ஊட்டச்சத்து கூறுகளை பாதுகாக்கக்கூடிய சிறந்த முறையாக விரைவு உறைபதனம் கருதப்படுகிறது. சாதாரண உறைபதன முறைகளில், பொருள் மெதுவாக உறையும் போது பெரிய பனிக்கட்டிகள் உருவாகி செல்கள் சேதமடையும் அபாயம் உள்ளது. ஆனால் மிகக் குறைந்த வெப்பநிலையில் மிக வேக மாக உறையச் செய்வதால், மிகச் சிறிய பனித்துகள்கள் மட்டுமே உருவாகின்றன. இதனால் பழத்தின் உள்ளமைப்பு பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்படுகிறது. இந்த முறையின் முக்கிய தனிச்சிறப்பு, ஒவ்வொரு பழத் துண்டும் தனித்தனியாக உறையச் செய்யப்படுவது தான். திரவ மயமாக்கல் அடிப்படையிலான காற்றோட்ட முறையின் மூலம், பழத்துண்டுகள் உறைபதன அறையில் சுழலச் செய்யப்படுகின்றன.

இதனால் அவை ஒன்றோடு ஒன்று ஒட்டாமல், சிதறலாக உறைகின்றன. வழக்கமான உறைபதன முறைகளில் பல மணி நேரம் எடுத்துக்கொள்ளும் செயல்முறை, இந்த முறையில் மிகக் குறுகிய நேரத்திலேயே நிறைவேறுகிறது. இந்த வேகமான உறைபதனமே தரத்தை பாதுகாக்கும் முக்கிய காரணமாகும்.

நாவற்பழத்திற்கு இந்த முறை மிகவும் பொருத்தமானது, ஏனெனில் இது மென்மையான அமைப்பைக் கொண்டது. விரைவு உறைபதனம் செய்யப்பட்ட நாவற்பழம், உருகிய பின்னரும் அதன் இயல்பான வடிவத்தையும் நிறத்தையும் பெரும்பாலும் தக்கவைத்துக்கொள்கிறது. மேலும், பழங்கள் கட்டியாக சேர்ந்து உறையாததால், தேவையான அளவு மட்டும் எடுத்துக் கொண்டு பயன்படுத்த முடியும். மீதமுள்ள பகுதி உறைந்த நிலையிலேயே பாதுகாக்கப்படலாம். இதன் மூலம் வீணாக்கம் குறைகிறது.

இந்த முறையில் பாதுகாக்கப்பட்ட நாவற்பழம், சாறு தயாரிப்பு, பழக்கலவைகள், ஐஸ்கிரீம், இனிப்பு தயாரிப்புகள் மற்றும் செயல்பாட்டு உணவுகளில் மூலப்பொருளாக பயன்படுத்தப் படலாம். ஆண்டு முழுவதும் தரமான மூலப்பொருள் கிடைப்ப தால், செயலாக்கத் தொழில்துறைக்கு இது மிகப்பெரிய ஆதரவாக அமைகிறது.

## உறை உலர்த்தல் தொழில் நுட்பம்



*தனித்தனி விரைவு உறைபடுத்தல் உபகரணம்*


உறை உலர்த்தல் என்பது உயர்தர உலர்ந்த நாவற் பழத் தயாரிப்புகளை உருவாக்க பயன்படும் முன்னேற்றமான முறை யாகும். இது குறைந்த வெப்ப நிலையிலும் அதிக வெற்றிட நிலையிலும் செயல்படு வதால், வெப்பத்தால் பாதிக்கப்படக்கூடிய கூறுகள் பாதுகாக்கப் படுகின்றன. குறிப்பாக ஆன்டி-ஆக்சிடென்ட் கூறுகள், இயற்கை நிறமூட்டிகள் மற்றும் சுவைத் தன்மைகள் இந்த முறையில் சிறப்பாக தக்கவைக்கப்படுகின்றன. இந்த செயல் முறை மூன்று முக்கிய கட்டங்களை கொண்டு உள்ளது. முதலில், நாவற்பழம் முழுமையாக உறைய வைக்கப்படுகிறது.

அடுத்த கட்டத்தில், பனியாக உள்ள நீர் குறைந்த அழுத்த நிலையில் நேரடியாக ஆவியாக மாற்றப்படுகிறது. இறுதிக் கட்டத்தில், மீதமுள்ள பிணைந்த ஈரப்பதம் அகற்றப்படுகிறது. இந்த முழு செயல்முறையின்போது, பழத்தின் செல்கள் குறைந்தளவு சேதமடைவதால் அதன் தரம் மேம்படுகிறது.

உறை உலர்த்தப்பட்ட நாவற்பழம் மிக இலகுவான, நீண்டகால சேமிப்பு திறன் கொண்ட தயாரிப்பாக மாறுகிறது. இதனை தூளாக மாற்றி உடனடி பான கலவைகள், ஊட்டச்சத்து பொருட்கள், குழந்தை உணவுகள் மற்றும் ஆரோக்கியப் பானங்களில் பயன்படுத்த முடியும். மேலும், இயற்கையான நிறம் மற்றும் சுவை பாதுகாக்கப்படுவதால், செயற்கை சேர்மங்கள் தேவையில்லாமல் தயாரிப்புகளை உருவாக்க இயலும்.

இந்த முறையின் மூலம் நாவற்பழத்தின் உயிர்ச்செயலூக்கக் கூறுகள் நீண்டகாலம் நிலைத்திருக்கின்றன. குறிப்பாக ஏற்றுமதி சந்தைகளில், உயர்தர மற்றும் நீண்டகால சேமிப்பு திறன் கொண்ட தயாரிப்புகளுக்கு அதிக தேவை காணப்படுகிறது. அந்த தேவையை பூர்த்தி செய்ய இந்த தொழில்நுட்பம் பெரும் வாய்ப்புகளை வழங்குகிறது.

## முடிவுரை



உறை உலர்த்தி

தனித்தனி விரைவு உறை பதனம் மற்றும் உறை உலர்த்தல் போன்ற நவீன உறைபதன முறைகள், நாவற்பழத்தின் பாதுகாப்பு மற்றும் வணிக வளர்ச்சியில் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இம்முறைகள் பழத்தின் நிறம், சுவை, அமைப்பு மற்றும் ஊட்டச்சத்து மதிப்பை பாதுகாத்து, சேமிப்பு காலத்தை நீட்டிக்கின்றன. இதன் மூலம் அறுவடை பிந்தைய இழப்புகள் குறைகின்றன மற்றும் ஆண்டு முழுவதும் பயன்பாடு சாத்தியமாகிறது. தொடர்ந்து தொழில்நுட்ப மேம்பாடு மேற்கொள்ளப்பட்டால், நாவற்பழம் உலகளாவிய ஆரோக்கிய உணவுப் பொருட்களில் முக்கிய இடத்தைப் பெறும் திறன் கொண்டதாக மாறும்.

தகவல் : *ச.பர்வீன், பா.ஹேமலதா, செ.மணிகண்டன், க.ஞா. கவிதா ஸ்ரீ, பி.ராஜ்குமார், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்.*

# ரூ.25 லட்சத்திற்கு பட்டுக்கூடு ஏலம்

தர்மபுரி, மார்ச் 31

தர்மபுரி பட்டு வளர்ச்சி துறை சார்பில், பட்டுக்கூடு ஏல அங்காடி தர்மபுரி நான்கு ரோடு அருகே செயல்பட்டு வருகிறது. இந்த அங்காடிக்கு தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு, மாரண்ட ஹள்ளி பகுதிகளில் இருந்தும், ஈரோடு சித்தோடு, சத்திய மங்கலம், கரூர், திருவண்ணாமலை பகுதிகளில் இருந்தும் தினமும் 30க்கும் மேற்பட்ட விவசாயிகள் பட்டுக்கூடுகளை கொண்டு வந்து ஏலத்தில் பங்கேற்கின்றனர்.

தர்மபுரி ஏல அங்காடியில், தாங்கள் கொண்டு வரும் பட்டுக் கூடுகளுக்கு அதிகபட்ச விலை கிடைப்பதால், ஏராளமான விவசாயிகள் ஏலத்தில் கலந்து கொள்கின்றனர். தர்மபுரி மற்றும் சுற்றுவட்டாரத்தை சேர்ந்த 57 விவசாயிகள் 3,940 கிலோ வெண் பட்டுக்கூடுகளை கொண்டு வந்திருந்தனர். இந்தப் பட்டுக்கூடுகள் ரூ.25,39,652க்கு ஏலம் போனது.

# திருச்செங்கோட்டில் ரூ1.05 கோடிக்கு மஞ்சள் விற்பனை



ஈரோடு, மார்ச் 31

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் தலைமை யகத்தில், மஞ்சள் ஏலம் நடை பெற்றது. பூலாம்பட்டி, சங்ககிரி, அந்தியூர், துறையூர், தம்மம்பட்டி, உப்பிலியாபுரம், தர்மபுரி, பென்னாகரம், தலைவாசல், ஆத்தூர் ஆகிய பகுதிகளில் இருந்து மஞ்சளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதில், விரலி மஞ்சள் குவிண்டால் ரூ.8500 முதல் ரூ.15359 வரையிலும், கிழங்கு மஞ்சள் ரூ.7000 முதல் ரூ.13109 வரையிலும், பனங்காளி ரூ.8899 முதல் ரூ.33673 வரையிலும் விற்பனையானது. மொத்தமாக ரூ.1.05 கோடிக்கு விற்பனையானது.


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396

# ஆடுகளை கோடை வெயிலிலிருந்து பாதுகாப்பதற்கான பராமரிப்பு முறைகள்

ஆடு வளர்ப்பானது சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்களுக்கு வாழ்வாதாரமாக விளங்கி வருகின்றது. ஆடுகளின் மரபுப் பண்பு, தட்பவெப்பநிலை மற்றும் அவற்றிற்கு வழங்கப்படும் பராமரிப்பு ஆகிய மூன்றும் இணைந்து செயல்பட்டு அவற்றின் உற்பத்தித் திறனை வெளிப்படுத்த வழி வகை செய்கின்றன. ஆடுகளின் உடல் நலத்தை பாதிப்பதிலும், உற்பத்தித் திறனைக் குறைப்பதிலும் தட்பவெப்பநிலை மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. அதிலும் குறிப்பாக கோடை காலத்தில் அதிக அளவு வெப்பம் தாக்குவதால் ஆடு வளர்ப்பில் பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆனால் சில தகுந்த மேலாண்மை முறைகளைக் கடைப்பிடித்தால் கோடை வெப்பத்தி லிருந்து ஆடுகளின் உடல் நலத்தைப் பாதுகாப்பதுடன் அவற்றின் உற்பத்தியையும் சீராக வைத்திருக்க முடியும்.

## கோடை வெயிலின் தாக்கம்

கோடைக் காலங்களில் அதிகமான வெப்பத்தாலும் புழுக்கத் தாலும் உடலில் வெப்ப சக்தி தேங்குவதன் விளைவாக சுவாச மற்றும் இரத்த ஓட்ட மண்டலங்களில் ஏற்படும் பலத்த அதிர்ச்சியே வெப்ப அயற்சி எனப்படுகிறது. முக்கியமாக காற் றோட்டம் சரியாக இல்லாத கொட்டகைகளில் அடைக்கப்படு வதாலும் சுற்றுப்புற ஈரப்பதம் மிகுதியானதாக இருப்பதும், அதிக வெயிலில் மேய்ச்சலுக்கு அனுப்பும் போதும், வெயில் காலங் களில் போதியக் குடிநீர் கிடைக்காததாலும் ஆடுகள் பெரும் பாலும் வெப்ப அயற்சிக்கு உள்ளாகின்றன.

## அறிகுறிகள்

1. வெப்ப அயற்சியால் தாக்கப்பட்ட ஆடுகள் கடும் அயர்ச்சிக்கு உள்ளாவதால் உடல் மிகுந்த களைப் படைகின்றன.

2. உடம்பின் வெப்பநிலை 42 டிகிரி செண்டிகிரேடுக்கும் அதிகமாக இருக்கும்.

3. ஆரம்ப நிலையில் வாயிலிருந்து உமிழ் நீர் சுரப்பும் மூச்சிரைப்பும் இதயப் படபடப்பும் காணப்படும்.

4. ஆடுகள் நடக்கும் பொழுது தள்ளாடும்.

5. தண்ணீர் தாகம் இருக்கும். பக்கத்தில் நிழல் இருந்தால் அங்கு போய் நின்று கொள்வதும் படுத்துக் கொள்வதுமாய் இருக்கும்.

6. கருவுற்ற ஆடுகளில் கருச்சிதைவு ஏற்பட வாய்ப்புள்ளது.

7. சில ஆடுகள் வெப்பம் தாங்காமல் கீழே விழுந்து வலிப்பு ஏற்பட்டு இறந்து விடுவதும் உண்டு.

8. சரியான தருணத்தில் கண்டறிப்பட்டுச் சிகிச்சையளிக்கப் படாத சூழலில் பாதிக்கப்பட்ட ஆடுகளின் உயிருக்கே ஊறு விளைவிக்கும்.

**கோடை வெப்பத்தால் பாதிக்கப்பட்ட ஆடுகளைப் பராமரிக்கும் முறைகள்**

1.போதுமான அளவு குளிர்ந்த குடிநீர் கொடுக்க வேண்டும்.

2.நிழலான காற்றோட்ட வசதியுள்ள இடத்தில் ஆடுகளைக் கட்டி வைக்க வேண்டும்.

3.உடல் முழுவதும் குளிர்ந்த நீரைத் தெளிக்கலாம்.

4.தலை மீது பனிக் கட்டிகள் நிறைந்த துணி அல்லது நெகிழிப் பைகளை வைக்கலாம்.

5.கொட்டகையின் கூரை அஸ்பெஸ்டாஸ், அட்டை மற்றும் சீமை ஓடுகளுக்குப் பதிலாக தென்னங்கீற்று மற்றும் பனை ஓலைகளை பயன்படுத்துவதன் மூலம் வெப்பத்தின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

6.கோடை வெப்பத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட ஆடுகளை கால்நடை மருத்துவரின் ஆலோசனையின் படி சிகிச்சை அளித்துக் குணப்படுத்த வேண்டும்.

**கோடை காலத்தில் மேலாண்மை முறைகள்**

**கொட்டகை மேலாண்மை**

● நம் நாட்டிற்கு ஏற்றாற்போல் கொட்டகையின் நீளவாக்கு கிழக்கு மேற்காக கட்டப்பட வேண்டும். இல்லையேல் கொட்டகையனுள் அதிக சூரிய வெப்பம் தாக்கி பாதிப்பை ஏற்படுத்தும்.

● நல்ல காற்றோட்ட வசதி ஏற்படுத்தும் வகையில் மேடான இடத்தில் கொட்டகை அமைப்பதோடு கொட்டகையின் மொத்த

அகலம் 20 அடிக்கு மிகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லையேல் கொட்டகையினுள் காற்றோட்டம் தடைப்படுவ தோடு கொட்டகையினுள் வெப்பம் மற்றும் ஈரப்பதம் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

● பக்கச்சுவர்கள் இன்றி மூங்கில் அல்லது மரச்சட்டம் கொண்டு சுற்றிலும் பாதுகாப்பு அமைத்துக் கொள்ளலாம். இல்லையேல் காற்றோட்ட அளவு குறைந்து கொட்டகையினுள் சாதகமற்ற சூழல் உருவாகும்.

● வெப்பம் கடந்து உள்ளே செல்லாதவாறு தக்க கூரைகளை அமைக்க ஓலை மற்றும் வைக்கோல் போன்றவற்றைக் கொண்டு அமைக்கலாம். மெல்லிய உலோக தகடுகள், கல்நார் கொண்டு கூரை அமைத்திருந்தால் அதன் மேல் வைக்கோல், தட்டை, தென்னங்கீற்று, பனை ஓலைகளைப் பரப்பி கொட்டகை யினுள் வெப்பத்தைக் குறைக்கலாம்.

● ஒன்றுக்கு மேற்பட்ட கொட்டகைகள் கட்டும் பொழுது இரு கொட்டகைகளுக்கும் இடைப்பட்ட இடைவெளி 30 அடிக்கு மேல் இருக்க வேண்டும். இது நல்ல காற்றோட்டத்தைக் கொடுக்கும். வெப்ப தாக்குதலும் குறையும்.

● கொட்டகைகளைச் சுற்றி நிழல் தரும் மரங்களை வளர்ப்பது கோடையில் வெப்ப தாக்குதலைக் குறைக்கிறது.

● வெயில் அதிகமாக இருக்கும் நேரத்தில் ஓடு, அஸ்பெஸ் டாஸ், தகரம் கொண்ட கூரையாக இருக்கும் பட்சத்தில் அதன் மேல் சாக்கு மற்றும் வைக்கோலைப் பரப்பி அதன் மேல் தண்ணீரைப் பாய்ச்சினால் கூரையில் ஈரம் இருக்கும் வரையில் கொட்டகையினுள் வெயிலின் தாக்கம் இல்லாமல் குளிர்ச்சியாக இருக்கும்.

● மாலை வேளைகளில் கொட்டகையைச் சுற்றிலும் தண்ணீரை ஊற்றினால் வெப்ப தாக்குதலைத் தவிர்க்கலாம்.

**தீவன மேலாண்மை**

● கோடைக் காலங்களில் பொதுவாக காலை 11.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை வெயில் அதிகம் இருக்கும். இந்த நேரத்தில் ஆடுகளை அதிக வெப்பத்திலிருந்து காக்கும் பொருட்டு வெளியே மேய்ச்சலுக்கு அனுப்பக் கூடாது. வெயிலின் தாக்கம் குறைந்திருக்கும் சமயத்தில் மேய்ச்சலுக்கு அனுப்ப வேண்டும்.

● கோடை காலத்தில் ஆடுகள் தீவனம் உண்ணுவதும் குறையும். அதனால் நல்ல தரமான கலப்புத் தீவனம், பசுந்தீவனம் மற்றும் உலர் தீவனம் ஆகியவற்றை வெயிலின் தாக்கம் குறைந்திருக்கும் வேளையில் கொடுக்க வேண்டும். ஆடுகளுக்கு பகலில் கொடுக்கும் தீவனத்தின் அளவைக் குறைத்துக் கொண்டு மாலை மற்றும் இரவு நேரங்களில் அதாவது வெயில் இல்லாத நேரத்தில் தீவனம் கொடுக்க வேண்டும். இதனால் ஆடுகள் தீவனம் உண்ணுவது அதிகரிப்பதோடு உற்பத்தித் திறனும் பாதிக்காது.

● கோடையில் ஆடுகளுக்கு கண்டிப்பாக தரமான பசுந்தீவனம் தேவைப்படுகின்றது. ஆனால் கோடையில் இவை கிடைப்பது அரிதாகின்றது. ஆகையால் கோடைக்கென்று தீவன சேமிப்பு அவசியம். பசுந்தீவனத்தை சைலேஜ் என்னும் ஊறுகாய் புல்லாக மாற்றி அளிக்கலாம் அல்லது தண்ணீர் வசதியுள்ள பண்ணைகளில் பசுந்தீவனங்களை பயிரிட்டு அவற்றைத் தீவனமாக அளிக்கலாம்.

● கோடையில் ஆடுகளுக்குப் புரதச்சத்து அதிகம் தேவைப் படும். அவற்றிற்கு அடர் தீவனத்துடன் புரதச்சத்து மிக்க மர தழைகளை தீவனமாக பயன்படுத்துதல் நல்லது. இல்லையேல் எரிசக்தி மற்றும் புரதச் சத்து பற்றாக்குறையாலும் தரமான மற்றும் போதுமான தீவன பற்றாக்குறையாலும் உற்பத்தி பெருமளவு பாதிப்படையும்.



● கோடைக்காலத்தில் ஆடுகளின் நீர்த்தேவை அதிகமாக இருக்கும். அதனால் ஆடுகளுக்கு குறிப்பிட்ட நேரத்தில் தண்ணீர் கொடுக்கும் பழக்கத்தை விட்டுவிட்டு எப்பொழுதும் ஆடுகள் குடிப்பதற்கு தண்ணீர் கிடைக்குமாறு கொட்டகையினுள் தண்ணீர் தொட்டிகளில் அல்லது வாளிகளில் தண்ணீர் இருக்குமாறு செய்ய வேண்டும்.

**கோடை காலத்தில் நோய் தடுப்பு முறைகள்**

கோடையில் வெப்பத்தின் தாக்குதலால் ஆடுகளில் நோய் எதிர்ப்புத் தன்மை குறைந்து காணப்படுவதால் பல்வேறு வகையான நோய்கள் தாக்க வாய்ப்புள்ளது.

**கோமாரி நோய் :** கோடையின் ஆரம்பத்தில் இந்நோய்க்கானத் தடுப்பூசி அளிப்பது மிகவும் அவசியம். இல்லையேல் இந்நோய் தாக்கத்தால் ஆடுகள் கோடை வெப்பத்தைத் தாங்க முடியாமல் அதன் உற்பத்தி அதிக அளவு பாதிக்கும்.

**அடைப்பான் நோய் :** இந்த நோய்க்கான தடுப்பூசியை 6 மாத வயதிற்கு மேற்பட்ட ஆட்டுக்குட்டிகள் மற்றும் ஆடுகளுக்கும் இந்நோய் தாக்க வாய்ப்புள்ள இடங்களில் ஆடு மருத்துவர் ஆலோசனையின் படி போட வேண்டும்.

**உண்ணிக் காய்ச்சல் :** உண்ணிகளால் பரவும் உண்ணிக் காய்ச்சல் கோடையில் அதிகம் ஆடுகளைத் தாக்கும். எனவே நோய் வராமல் தடுக்க உண்ணிகளை அழிப்பதோடு சுற்றுப் புறத்தைத் தூய்மையாக வைத்து ஆடுகளைப் பராமரிக்க வேண்டும்.

கோடையில் பெரும்பாலும் நீர்நிலைகள் போதிய நீரின்றி வறண்டோ அல்லது சிறிதளவு நீருடன் காணப்படும். இவற்றில் நத்தை மற்றும் நோய்க்கிருமிகள் அதிகம் காணப்படும். இந்த நத்தைகள் மூலம் ஆடுகளுக்கு இரைப்பையை தாக்கும் ஒட்டுண்ணிகள் பரவும். இனால் ஆடுகள் வறண்ட அல்லது சிறிதளவு நீர் உள்ள நீர் நிலைகளில் தண்ணீர் அருந்த விடக் கூடாது.

இவ்வாறு ஆடு வளர்ப்பில் தகுந்த மேலாண்மை முறைகளைக் கடைப்பிடித்து கோடை காலத்தில் ஆடுகளின் உற்பத்தித் திறன் குறையாமல் ஆடுகளைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

தகவல் : ***முனைவர் இரா. உமாராணி, பேராசிரியர், கால்நடைப் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆய்வு மையம், திருப்பரங் குன்றம், மதுரை– 625 005.***

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741